CrMP No.1209/21 ம.சா.1 பாலசுப்பிரமணியன் த/பெ.சின்னையா நாள் : 13.03.2021

இந்த வழக்கின் எதிரி முருகேஷ் புதுக்கோட்டையை சேர்ந்தவர். எதிரி எனக்கு 20 வருடமாக பழக்கம். அந்த வகையில் எதிரியை எனக்கு தெரியும். குடும்ப அவசர செலவு மற்றும் வியாபார தேவைகளுக்காக ரூபாய் 25 லட்சம் கடன் கேட்டார். 6 மாதத்தில் திருப்பி தந்துவிடுவதாக சொன்னார். நான் 06.08.2016 ம் தேதி எதிரிக்கு ரூபாய் 25 லட்சம் பணமாக கொடுத்தேன். 6 மாதம் கழித்து பணத்தை திரும்ப கேட்டேன். தருகிறேன் என கூறி தாமத படுத்தி விட்டார். மேற்படி பணம் என்னுடைய ஓய்வு பலன் மற்றும் புதுக்கோட்டையில் வீடு வித்த வகையிலும் மற்றும் எனக்கு தெரிந்தவரிடமும் கடனாக பெற்ற தொகையாகும். அதற்கு அவர் புதுக்கோட்டை கரூர் வைசியா வங்கி கிளை காசோலை எண் 000001 என்ற எண் கொண்ட 03.12.2020-ம் தேதியிட்ட பூர்த்தி செய்யப்பட்ட காசோலையை என்னிடம் கொடுத்தார். நான் அதனை 28.12.2020 ம்தேதி ஆலங்குடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வசூலுக்காக செலுத்தினேன். அது Refer to Drawer என்ற காரணம் கூறி 29.12.2020 ம் தேதி குறிப்பாணை மூலம் திரும்பியது. அதனை எனக்கு 30.12.20120 ம் தேதி குறிப்பாணை வழங்கி தெரிவித்தார்கள். அதனால் நான் வழக்கறிஞர் மூலம் 13.01.2021 ம் தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன். அதனை எதிரி 21.01.2021 ம் தேதி பெற்றுக்கொண்ட எதிரி 05.02.2021 ம் தேதி உண்மைக்கு புறம்பான காரணங்கள் கூறி பதில் அறிவிப்பு கொடுத்தார். எனவே என்னிடம் பணத்தை வாங்கிக்கொண்டு ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு காசோலையை கொடுத்து என்னை ஏமாற்றிய நபர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.